இந்திய விடுதலைப்போரில் முஸ்லிம்கள் - 1

விடுதலையின் நிறம் பச்சை!

செ.திவான்

இந்திய விடுதலைப்போரில் முஸ்லிம்கள் - 1

விடுதலையின் நிறம் பச்சை!

(மாபெரும் தியாகிகள் - ஷேர்அலி & அஷ்பாக்குல்லாகான்)
(Great Martyrs - Sheir Ali & Ashfaqullah Khan)

வரலாற்றாசிரியர்
செ.திவான், எம்.ஏ,எம்ஃபில்.,

சுஹைனா பதிப்பகம்
106-F 4 A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.
தமிழ்நாடு. ✆ 0462 - 572665.

ஆசிரியரின் 45-வது நூல்
உரிமை : ஆசிரியருக்கு
முதற்பதிப்பு : ஆகஸ்ட் 15, 2001 சுதந்திர தின வெளியீடு
விலை : ரூபாய் பத்து
அச்சிட்டோர் : ஹமீது பிரஸ், திருநெல்வேலி டவுண்.

காணிக்கை

நெல்லை மாவட்ட ம.தி.மு.க. விவசாய அணி அமைப்பாளர்
சகோதரர் திரு.ப. கல்லத்தியான் அவர்களின் தந்தையாரும்,
பாளையங்கோட்டை தாலுகா திம்மராசபுரத்தைச் சேர்ந்த
சிறிய தந்தையார்

M.பட்டக்கோனார் அவர்களுக்கு.....

சுஹைனா பதிப்பகம்

கல்வித்தந்தை சுலைமான் இல்லம்,
106-F 4 A, திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை - 627 002.
தமிழ்நாடு. ✆ 0462 - 572665.

இரத்தம் கசியும் இதயத்தின் குரல் (எண்ண அலைகள்)

அன்னைத் திருநாட்டினை அடிமைத்தளையிலிருந்து அகற்றி சுதந்திரம் வாங்கித் தந்தவர்கள் நடத்திய விடுதலைப்போரைப் பற்றிய வரலாற்றினை, வரலாற்று ஆய்வாளர்கள் பார்வையில் இதுவரையில் முழுமையாகவும், முழுவதுமாகவும் எழுதப்படவில்லை என்றே சொல்லலாம்.

கத்தியின்றி ரத்தமின்றி வந்ததன்று சுதந்திரம்; செந்நீர் சிந்தியவர்களின் முகங்களும் பெயர்களும் பட்டியலிட்டுக் காட்டுவதற்கு அடங்காதவை. மதங்கள் கடந்து, மாநில எல்லைகளைக் கடந்து, மொழி வேற்றுமைகளைக் கடந்து, இந்திய விடுதலை இயக்கம் காலத்துக்குக் காலம், தன் அணுகுமுறைகளை மாற்றிக் கொண்டு நடைபெற்றது என்பது உண்மை. இந்துக்கள், முஸ்லிம்கள், சீக்கியர்கள், பார்சிகள், கிறிஸ்தவர்கள் இன்ன பிற மதத்தினர் எல்லோரும் இந்த நாட்டு விடுதலைப் போரில் பங்கேற்றனர்.

வணிகக்கொடி பிடித்து, வஞ்சகவலை விரித்து, வளமார்ந்த திருநாட்டை வளைத்துக் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தினரின் வருகையால் தங்கள் ஆட்சியைப் பறிகொடுத்தனர் முஸ்லிம்கள்; இஸ்லாமிய சமுதாய மக்கள் தங்களின் அதிகார உரிமையை இழந்ததால் ஆத்திரங் கொண்டிருந்தனர்; அதோடு ஆங்கிலேயரின் எதிர்ப்பில் ஆவேசமுங் கொண்டிருந்தனர்; எனவே இந்திய சுதந்திரப் போரில் வேகமாகப் பங்கு கொண்டனர். இது மறக்கப்பட்ட, அல்லது மறைக்கப்பட்ட வரலாறு என்பது உண்மையாகும்.

இந்திய விடுதலைப் போரில் இன்னுயிரைத் துச்சமென ஈந்தவர்கள், இல்லம் இழந்தவர்கள், இல்லாளைப் பிரிந்தவர்கள், தடியடி பட்டவர்கள், தண்டனைகள் பெற்றவர்கள்; சிறைச்சாலையில் சித்திரவதைக்குள்ளானவர்கள், தூக்குமரத்தை முத்தமிட்டவர்கள் என நீண்டு கொண்டே செல்லும் தியாக சீலர்களின் வரலாற்றில் அத்தியாயங்களாக, வாக்கியங்களாக, ஏன் வார்த்தைகளாகக்கூட இடம் பெறாமல் வஞ்சிக்கப்பட்டவர்கள் இந்திய முஸ்லிம்கள்.

சூரியனே அஸ்தமிக்காத ஆங்கிலேய சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்தைத் தகர்த்து, வெள்ளையர் ஆட்சியை நம் தாய் நாட்டினின்றும் விரட்டியடிக்க வீறு கொண்டெழுந்து, விடுதலை வேள்வியில் தங்களைப் பலியாக்கிக் கொண்டு, வாழ்க்கைச் சுகங்களையும், வசதிகளையும் தியாகம் செய்த முஸ்லிம்கள் கணக்கற்றவர்கள். வீட்டை மறந்து, நாட்டை நினைத்து தங்களை மெழுகுவர்த்திகளாக்கிக் கொண்டு, இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் பெற்றுத்தர முன் வந்தவர்களில் முஸ்லிம்கள் அதிகம்; சுதந்திரமும் சுயமரியாதையும் இரு கண்கள் எனக் கொண்டு வாழ்ந்து மறைந்த, நம் கண்ணறையின் ஒளிபடாமல் கல்லறையில் துயிலும் விடுதலை வீரர்கள், முஸ்லிம் தியாகிகள் கண்ணியத்திற்குரியவர்கள்.

''வீரர்கள் சரிதை', வீழ்ந்த சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சி தரும் ஓர் சக்தி; வகை கெட்டுத் தடுமாறும் நாட்டிற்கு வாழ வகை காண்பிக்கும் வழிகாட்டி. அந்தோ, நாம் இங்கு தீரர்களின், தியாகிகளின் சேவைகளை, சிந்திப்பதில்லை; மதிப்பதில்லை; வீரர் தம் வாழ்வினைப் பற்றி விளம்புவதும் இல்லை; நம் நாட்டு பால பாடமும் இதற்கென அமையவும் இல்லை. இந்நிலை மாற வீட்டுக்கோர் வீரர்கள் சரிதை இருக்க வேண்டும்' என்பர் டி.எஸ்.ஏ. ரசூல்.

'விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்' எனும் ஆய்வு நூலை, பெருமுயற்சி செய்து 320 பக்கங்களில் 1994-இல் வெளியிட்டேன். சென்னையில் கண்ணியத்திற்குரிய திருமிகு. **வைகோ** எம்.பி. (பொதுச்செயலாளர் மறுமலர்ச்சி தி.மு. கழகம்) அவர்கள் அதனை வெளியிட்டார்கள்; அதனைத் தொடர்ந்து, 'இந்திய சுதந்திரப் போரில் முஸ்லிம்கள்' எனும் பெரு நூலினை எழுதத் திட்டமிட்டேன். 'இஸ்லாமிய சகோதரத்துவக் குரல்' எனும் இதழில் சில கட்டுரைகளை தொடராக எழுதினேன்; பின்னர்'ஜமா அத்துல் உலமா' மாத இதழில் தற்போது அது குறித்து தொடர் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

இறைவன் நாடினால், வாழ்வில் ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட அந்தப் பெருநூலை எழுதி முடித்திடத் திட்டமிட்டுள்ளேன். ஆனால் உடல் நலமும், பொருள் நலமும் குன்றிய நிலையில் மொத்தமாக அதனைப் பிறகு இணைத்து வெளியிட்டுக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தேன்; இந்திய சுதந்திரப் போரில் இஸ்லாமியர்கள் எனும் தலைப்பில் 50-க்கும் மேற்பட்ட சிறு வெளியீடுகளை தொடர்ந்து தமிழில் இறைவனின் நாட்டப்படி தர இருக்கிறேன். அதற்கு வித்தாக இப்போது முதல் வெளியீடு வெளிவருகிறது.

1997 டிசம்பரில் இந்திய சுதந்திரப்போரில் இஸ்லாமிய தீரர் இருவர்' எனும் தலைப்பில் 'குர் ஆனின் குரல்' இதழில் புனிதத் தியாகி அஷ்ஃபாக் உல்லாகான் குறித்து சிறிய அளவில் எழுதியிருந்தேன்; அவரது தியாகம் குறித்த வரலாற்றினைக் கொஞ்சம் தேடினேன்; அதன் விளைவாக 'விடுதலையின் நிறம் பச்சை' எனும் தலைப்பில் இச்சிறு நூல் வெளிவருகிறது.நல்ல முறையில் இதனை அச்சிட்டுத் தந்த ஹமீது பிரஸ் அண்ணன் ஜனாப். சாகுல் ஹமீது அவர்களுக்கும், சமூக ஆர்வலர் பாளை ஐ. சாமுவேல் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் பொருளாதார வசதி கொண்டோர், இது போன்ற வெளியீடுகள் வெளிவர பொருள் உதவி புரிவார்களாக!

இதனைப் போன்ற பல வெளியீடுகளை தொடர்ந்து வெளியிட எல்லாம் வல்ல இறைவன் அடியேனுக்கு உடல் நலத்தைத் தருவானாக! பொருள் வளத்தை அளிப்பானாக! அருள்புரிவானாக! **செ.திவான்**

விடுதலையின் நிறம் பச்சை

அன்னைத் திருநாட்டின் விடுதலை இயக்கத்தில் பெரும் பங்கு கொண்ட இந்திய தேசிய காங்கிரசின் அறுபதாண்டு வரலாற்றை எழுதியவர் பட்டாபி சீதாராமையா. அதிகார பூர்வமான வரலாறு என்று கூறப்பட்ட அந்த வரலாற்றில் உலகெல்லாம் வாழும் தமிழர்கள் நினைத்து நினைத்துப் பெருமை கொள்ளவும், போற்றிப் பாராட்டிடும் வகையிலும் தரணியில் தனக்கெனத் தனிச் சிறப்புப் பெற்ற விடுதலைப் போராட்ட கால உத்தமத் தலைவர், செக்கிழுத்த செம்மல் வ.உ. சிதம்பரம் பிள்ளையினைப் பற்றி ஒரு வரிகூட சொல்லப்படவில்லை.

மிகப்பெரிய அளவில் விடுதலை வேள்வியில் தங்களை அர்ப்பணித்தவர்களின் நிலையே இது என்கிற போது புனிதத் தியாகி அஷ்பா குல்லா கான் போன்றவர்களின் வரலாற்றினை வெளியில் தெரியும் அளவில் எப்படி விளக்கியிருப்பார்கள்?

இந்த எண்ணத்திலே தான் 'அஷ்பா குல்லா கானின்' வரலாற்றுச் செய்திகளை தொகுத்து இங்கே தந்துள்ளேன். தியாகி அஷ்பா குல்லாகான் இந்திய விடுதலைப் போரில் ஆற்றிய பங்குதான் என்ன? அந்தச் சூழலில் இந்திய அரசியலில் இருந்த நிலை என்ன? இதோ அந்தச் செய்திகள்....

முஸ்லிம்களின் இந்திய சாம்ராஜ்யம்

டில்லியைத் தலைநகராகக் கொண்டு 592 ஆண்டு காலம் 46 இஸ்லாமிய அரசர்கள் ஆட்சி புரிந்து வந்திருக்கின்றனர். பாமினி ராஜ்யத்தில் 170 ஆண்டு காலம் 17 மன்னர்களும், மால்வா ராஜ்யத்தில் 130 ஆண்டு காலம் 7 அரசர்களும், குஜராத்தில் 136 ஆண்டுகளில் 9 மன்னர்களும், பிஜப்பூரில் 127 ஆண்டுகளில் 9 ராஜாக்களும், கோல் கொண்டாவில் 196 ஆண்டுகளில் 14 சுல்தான்களும், பெராரில் 8 ஆண்டுகளில் 4 அரசர்களும், பிதார் ராஜ்யத்தில் 135 ஆண்டுகளில் 12 மன்னர்களும், அவுத்தில் 35 ஆண்டுகளில் 12 நவாபுகளும், ஹைதராபாத்தில் 230 ஆண்டுகளில் 12 நிஜாம்களும், வங்களாத்தில் 67 ஆண்டுகளில் 10 தௌலாக்களும், மைசூரில் 22 ஆண்டுகளில் 2 சுல்தான்களும், ஆற்காட்டில் 135 ஆண்டுகளில் 12 நவாபுகளும் ஆக முஸ்லிம்கள் 1170 ஆண்டுகளுக்கு மேலாக இந்த நாட்டை ஆண்டு வந்துள்ளனர். கி.பி. 1857 வரை இத்தேசத்தின் எஜமான்களாக இருந்த முஸ்லிம் மன்னர்கள் வெள்ளையர் வருகையால், தங்கள் ஆட்சி அதிகாரத்தை இழந்தனர்; முஸ்லிம்களை அடக்கி நசுக்கிவிட வேண்டும் என்பது பிரிட்டிஷாரின் கொள்கையாக இருந்தது.

வெள்ளையரை எதிர்த்து எப்படியும் வெற்றி பெறுவது என்பது முஸ்லிம்களின் நோக்கமாக இருந்தது. எனவே ஆங்காங்கு வெள்ளையரை எதிர்த்து தொடர்ந்து போராடிக் கொண்டே இருந்தனர்.

1857இல் முகலாய மன்னர் பகதூர்ஷா தலைமையில் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒரணியில் நின்று நடத்திய சிப்பாய்களின் எழுச்சியின் போது மறைந்த முஸ்லிம்கள் 27 ஆயிரம் பேர்; வெள்ளையர்களால் கைது செய்யப்பட்டு அந்தமான் தீவிற்கு அனுப்பப்பட்டவர்கள் ஆயிரக்கணக்கானோர் ஆவர்.

6000 இந்தியர்கள்

அந்தமான் தீவில் இறக்கி விடப்பட்ட வீரர்கள் 6000 பேரில் பலர் இந்தோனேஷியாவிற்கு தப்பிச் சென்றனர், தீவில் இறக்கி விடப்பட்ட வீரர்கள் காட்டு விலங்குகளுக்கும், காட்டுவாசிகளின் தாக்குதலுக்கும் ஆளாகி மடிந்து போவார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்த வெள்ளையருக்கு இது அதிர்ச்சியைத் தந்தது. அந்தமானில் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களை விட்டு விடுவது மட்டும் நல்லதன்று. அங்கு சிறைக்கூடம் எழுப்பிட வேண்டுமென்று எண்ணியது.

உடனே வங்காளத்தின் கவர்னர் தனது மனைவியுடன் அந்தமான் தீவினைப் பார்வையிடச் சென்றார். அப்போது நாடு கடத்தப்பட்டிருந்த 6000 வீரர்களில், தப்பிப் பிழைத்திருந்த சிலர் அத்தீவில் காடுகளில் சுற்றிக் கொண்டிருந்தனர்.

தியாகி காசிம்

வெள்ளையர் மீது வெறுப்புற்றிருந்த வீரத்தியாகி காசிம் என்ற முஸ்லிம் இளைஞன் தீவினைச் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த ஆங்கிலேய கவர்னர் மீது வெறி கொண்டு பாய்ந்தார். தனது கரங்களாலேயே வெள்ளை ஆட்சியாளரைக் கொன்றார்; வீர சரித்திரத்தில் தியாகி காசிம் அழியாத இடத்தைப் பெற்றார்; அதன் பின்னரே அந்தமானில் பெரிய அளவில் சிறைச்சாலை உருவாக்கப்பட்டது என்பது வரலாறாகும்★ அதன் பின்னர் தான் அந்தமான் கூண்டுச் சிறை கைதிகளாலேயே கட்டப்பட்டது என்பதும் வரலாற்று உண்மையாகும்.★★

★. ப. சீனிவாசன், சிறைச்சாலைக் கொடுமைகள், கட்டுரை, விடுதலை வேள்வியில் தமிழகம், 2000, த. ஸ்டாலின் குணசேகரன் தொகுப்பு, பாகம் 2, பக்கம் 546.

★★ வீ. வீரையா, சிறிய பாரதம் அந்தமான் நிக்கோபார் தீவுகள், அந்தமான் 1987, பக் 37.

அப்துல் வஹ்ஹாப்

சவூதி அரேபியாவின் தலைநகரான ரியாலின் வட பகுதியில் உள்ள உயைனா என்ற இடத்தில் கி.பி. 1703-இல் பிறந்தவர் அப்துல் வஹ்ஹாப்:★ (கி.பி. 1791-இல் மறைந்தவர்)

இஸ்லாம் மார்க்கத்திற்கு விரோதமான அந்நிய ஆட்சியாளர்களை எதிர்த்து மத்திய கிழக்கு அரபு நாடுகளின் இயக்கம் தோன்றியது. அது அதன் தலைவரான அப்துல் வஹ்ஹாப் பெயரால் அழைக்கப்பட்டது.

இந்தியாவிற்கு அந்த இயக்கத்தை இறக்குமதி செய்தவர் சையது அஹமது ஆவார்.

சுதந்திர ஆட்சி

கி.பி. 1857-இல் நடைபெற்ற சிப்பாய்களின் எழுச்சியின் போது வஹாபி இயக்கத்தவர்கள் வங்காளத்தில் நாடியா மாவட்டம் 24வது பர்க்கானா பகுதிகளை ஆங்கிலேய ஆட்சியாளர்களிடமிருந்து விடுவித்தனர். பல நாட்கள் சுதந்திர ஆட்சியை நடத்தவும் செய்தனர்.★★

ஷரியத் உல்லா

கி.பி. 1857-ஆம் ஆண்டில் பரித்பூர் என்ற இடத்தைத் தலைமை இடமாகக் கொண்டு இந்தப் புரட்சி இயக்கம் இயங்கியது. ஷரியத் உல்லா, அவரது மகன் டாட்டுமியானும் புரட்சிப்படைகளை வழி நடத்தினர். அவர்களது குழுவிற்கு டூட்டி (duty) கடமை (Farz) என்று அழைக்கப்பட்டது. இந்தக் குழுவினர் தான் நாடியா மாவட்டத்தையும் பரீத் பூர் பகுதியையும் வெள்ளையரிடமிருந்து சில காலம் விடுவித்து சுயாட்சியை ஸ்தாபித்து நடத்தினார்கள்.

1857-ஆம் ஆண்டு புரட்சியானது வெற்றி பெறவில்லை; ஆனால் அதில் பங்கேற்ற முஸ்லிம்கள்; பலியான இஸ்லாமியர்கள் கணக்கற்றவர்கள் (அந்த வீர சரித்திரத்தை மட்டும் தனி வெளியீடுகளாக விரைவில் இறை நாட்டப்படி தர இருக்கிறேன்)

அமீர் கான்

புரட்சி இயக்க வீரர்கள் பாட்னாவில் அமீர்கான் என்பவரின் தலைமையின் கீழ் செயலாற்றி வந்தனர். பாரதத் திருநாட்டை முகலாய

★ அஹமது பின் ஹஜர், தமிழாக்கம். மௌலவி S. கமாலுத்தீன், இமாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப், சென்னை 1979, பக் 17.

★★ சிவலை இளமதி, சரித்திரத்தை மாற்றிய சதி வழக்குகள், சென்னை, 1982, பக்25.

மன்னர் பாபர் முதல் பகதூர்ஷா வரையில் முஸ்லிம் மன்னர்கள் ஆட்சி செய்த வரலாற்றை முஸ்லிம் இளைஞர்களுக்கு எடுத்துக்கூறி, வியாபாரம் செய்ய வந்த வெள்ளையர்கள் சூழ்ச்சி செய்து ஆட்சியைப் பிடித்ததையும் விளக்கி ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக அவர்களை போர் புரியத் தயாராகுமாறு பிரச்சாரம் செய்து வந்தார் அமீர்கான்.

கல்கத்தா சிறையில்

அமீர்கானின் வெள்ளை ஏகாதிபத்திய எதிர்ப்புப் பிரச்சாரத்தைப் பற்றி அறிந்த ஆங்கிலேயர், கி.பி. 1818-ஆம் ஆண்டின் பாதுகாப்புச் சட்டம் மூன்றாவது பிரிவின் கீழ் கி.பி. 1871-இல் அவரைக் கைது செய்தனர். கல்கத்தா (கொல்கத்தா) சிறையில் அடைத்தனர்; அத்தோடு அவரை நாடு கடத்தவும் உத்திரவிட்டனர்.

பாரிஸ்டர் அனெஸ்டி

அமீர்கானின் வழக்கில் வாதாட பாரிஸ்டர் அனெஸ்டி வந்தார்; ‘அமீர்கான் தேசபக்தியும், தெய்வப்பக்தியும் மிக்க ஒரு தேச பக்த சீலர்; அவரை எந்தவித விசாரணையும் இன்றி பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்து காவலில் வைத்திருப்பது சரியல்ல. அவரை நாடு கடத்துவது மாபெரும் அநீதி’ என்று நீதிமன்றத்தில் அனெஸ்டி வாதிட்டார்.

அஞ்சா நெஞ்சன் அப்துல்லாஹ்

வழக்கை விசாரித்த நீதிபதி நார்மன் இறுதியில் அமீர்கானை நாடு கடத்த உத்திரட்டார். புரட்சி இயக்க வீரன் அப்துல்லா என்பவர் தனது இயக்கத் தலைவர் அமீர்கானுக்குத் தண்டனை வழங்கிய நீதிபதி நார்மன் மீது 1871 செப்டம்பர் 20 தேதி புலியெனப் பாய்ந்து, அவரைத் தாக்கிக் கொன்றார். இதற்குப் பிறகு அரசாங்கம் அதற்கும் சதி வழக்குப் போட்டது. அப்துல்லா, ஷேர் அலி உட்பட 7 பேர் குற்றஞ் சாட்டப்பட்டனர். ஒரு வார காலங்கூட விசாரணை நடைபெறவில்லை, அப்துல்லாஹ்விற்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. 1871 நவம்பரில் தூக்கு மரத்திலே வீரச்சாவைத் தழுவினார் அப்துல்லாஹ்; மறைந்த அந்த மாவீரனின் சடலத்தை முஸ்லிம் சம்பிராதயப்படி புதைத்திட அனுமதிக்கப்படவில்லை; மாறாக எரித்தனர். இது புரட்சி இயக்க வீரர்களின் நெஞ்சத்தில் கனலாக எரிந்து கொண்டிருந்தது.

ஷேர் அலி

அந்தமான் சிறையில் வாடிய புரட்சி இயக்க வீரர் ஷேர் அலி தனது தோழன் அப்துல்லாஹ்விற்கு இழைக்கப்பட்ட அநீதியை எண்ணி மனங்கொதித்தார்; அதற்காகக் காலத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

லார்டு மேயோ

இந்தியாவின் அரசப்பிரதிநிதியாக அப்போது இருந்தவர் லார்டு மேயோ (கி.பி. 1869-1872) அவர் அந்தமான் தீவின் நிர்வாகத்தைச் சரி செய்திட டொனால்டு ஸ்டூவர்ட் (Donald stewart) என்பவரை அந்தமானுக்கு அனுப்பி வைத்தார். அங்கு அவர் பணிகளைத் துவக்கினார்; பின் இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியாளரான வைசிராய் லார்டு மேயோவை அந்தமானுக்கு அழைத்தார். அதன்பேரில் கி.பி. 1872 பிப்ரவரியில் லார்டு மேயோ அந்தமானுக்கு புறப்பட்டார்.

கிளாஸ்கோ (Glasgow) என்ற கப்பலின் மூலம் பயணஞ் செய்து அந்தமானின் ஹோப்டவுண் (Hope town) படகுத்துறைப் பகுதியில் மேயோ பிரபு தரை இறங்கினார்.

உயர் அதிகாரிகளுடன் தீவின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார். மேயோ பிரபு அவரது வருகையையொட்டி அந்தமான் தீவு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவரே எரிச்சல் படக்கூடிய அளவிற்குத் தேவைக்கு அதிகமாகவே பாதுகாப்பு ஏற்பாடுகள் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது.

அந்தமான் சிறைச்சாலையைப் பார்வையிட்டுக் கொண்டே வந்தார். அத்தோடு அங்கு சிறையில் இருந்த அரசியல் கைதிகளின் அருகில் நின்று கேலியும் பேசிக் கொண்டிருந்தார்.

8-2-1872

தனிமைச் சிறையில் ஆயுள் காலம் முழுவதும் அடைபட்டுக் கிடப்பதைக் காட்டிலும் வெள்ளை ஏகாதிபத்தியத்தின் அடையாளமான வைசிராயான (Viceroy) லார்டு மேயோவைக் கொல்லத் தீர்மானித்தார் ஷேர் அலி.

ஹோப் டவுண் படகுத்துறை, சூரிய அஸ்தமன நேரம்; இருள் பரவத் துவங்கிய வேளை; தீப்பந்தங்களின் வெளிச்சத்தில் அரசு அலுவலர்கள் சூழ்ந்து வர மேயோ பிரபு படகினை நோக்கி வந்து கொண்டிருந்தார். டொனால்டு ஸ்டூவர்ட் அடுத்த நாள் பயணத் திட்டங்கள் பற்றிய உத்தரவுகளை கொடுத்திட சற்று அகன்று சென்றார்.

அடுத்த விநாடி லார்டு மேயோ அவரது தனிச் செயலாளருக்கு முன்னால் தாவிக்குதித்து படகுத்துறையின் படிக்கட்டுகளில் இறங்கினார். அவரது சாம்பல் நிறக்கோட்டும், நெடிய உருவமும் தீப்பந்த வெளிச்சத்தில் தெளிவாகத் தெரிந்தது. அவரது படகுக்கும் அவருக்கும் ஒன்றிரண்டு படிக்கட்டுகள் தான் நடுவில் இருந்தது. திடீரென அவருக்குப்பின் சென்றவர்கள் 'யாரோ ஒருவர்'நெருங்கி வரும் பெரும் சப்தத்தைக் கேட்டனர். அப்போது காற்றிலே பளபளக்கும் கத்தி ஒன்று பறந்து வருவதையும் கண்ணுற்றனர். அவரது செயலாளர் மேஜர்பான் (Major Burne) திரும்பிப் பார்த்த போது, லார்டு மேயோவின் மீது ஒரு மனிதன் புலியைப் போல பாய்ந்தான்; அவனது கூரிய கத்தியும், அவனது கரங்களும், லார்டு மேயோவின் வாழ்வை முடித்து விட்டது. இந்தத் தகவலை இந்திய வரலாற்று நூலில் கேப்டன் லயனல் ஜே. டிராட்டர் கி.பி. 1886இல் தெரிவித்துள்ளார். இதோ அவரது வாசகங்கள்:

'One or two of them caught to gleam of a knife in the air; and his own secretary, Major Burne looking round saw a man fastened ***"like a tiger"*** on the back of his beloved chief. In another moment the murderer was pinned by a dozen strong hands; but his sharp knief and sinewy arm had done their work already.'★

வரிப்புலி போல வெள்ளையர் மீது பாய்ந்தார் ஷேர் அலி. தன் கரங்களையே ஆயுதமாக்கிக் கொண்டு, காவலர்கள் தடுக்குமுன் கண்மூடிக் கண் திறக்கும் நேரத்திற்குள் லார்டு மேயோவின் கழுத்தை நெறித்தும், சிறு கத்தியால் குத்தியும் லார்டு மேயோவைக் கொன்றார் ஷேர் அலி ★★

கொலைக்குற்றம் சாட்டப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டு, கி.பி. 1869இல் அந்தமான் தீவிற்கு அனுப்பப்பட்ட பெசாவரைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞன் ஷேர் அலி; தனக்கு கிடைத்த சிறிய விடுப்பில் உயர் பதவியில் உள்ள ஏதாவது ஒரு பறங்கியைக் கொன்றிட வேண்டும் என்று தீர்மானித்திருந்த அந்த வீர இளைஞன் இந்தியாவின் பிரிட்டிஷ் அரசப் பிரதநிதி என்ற மிகமிக உயர்ந்த பொறுப்பில் இருந்த லார்டு மேயோவைக் கொன்று தனது வீரசாகசத்தை வரலாற்றிலே பதித்துக் கொண்டான்.

★ Captain Lionel J. Trotter, History of India under Queen Victoria from 1836 to 1880, Vol II, London, 1886, P 297.

★★ Percival spear, The Oxford History of modern India, 1740-1947, The Oxford History of India, Part III, Oxford, 1965, P. 243.

இத்தகைய வீரச் சாதனையைப் புரிந்த இளைஞர் ஷேர் அலி ஜெனரல் ஸ்டுவர்ட் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டார்.

நீதிபதி நார்மனது கொலையிலோ, பிரிட்டிஷ் அரசுக்கு எதிரான மற்ற சதிகளிலோ ஷேர் அலி மீது குற்றம் சுமத்திட போதுமான ஆதாரங்கள் அகப்படவேயில்லை. விசாரணையின் போது ஷேர் அலியிடம் கேட்ட போது, **'இறைவன் ஒருவன் மட்டுமே இதிலே பங்கு வகித்தார்'** என்று துளியும் அஞ்சாமல் கர்ஜித்தது அந்த இளஞ்சிங்கம்.

ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஷேர் அலிக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.'தன் செய்கை நேர்மையானதென்று மரண தருவாயிலும் ஷேர் அலி கூறப் பின் வாங்கவில்லை'★

'அல்லாஹ்வின் கட்டளையை நான் நிறைவேற்றினேன்! எல்லாப் பலனும் அல்லாஹ்விற்கே' என்று கூறிவிட்டு, தனது தோழர் அப்துல்லாஹ்வின் உடலைப் புதைக்காமல் எரித்த பிரிட்டிஷ் ஆட்சியாளரின் பிரதிநிதியை தண்டித்த மகிழ்ச்சியில் நாட்டுக்காக சிரித்த முகத்தோடு சிங்கமென ஷேர் அலி 11.3.1872இல் தூக்கிலே மாண்டார்;

இந்தப் புரட்சி இயக்கத்தினைத் தொடர்ந்து எண்ணற்ற இஸ்லாமிய இளைஞர்கள் தேச விடுதலைப்போரில் குதித்து சாகசங்கள் பல செய்துள்ளனர். அவற்றில் குறிப்பிடத் தகுந்த சிலரில் புனிதத் தியாகி அஸ்பா குல்காகானும் ஒருவர். இதோ அவரது சரித்திரக் குறிப்புக்கள்.....

விடுதலைக்கு வித்திட்ட இயக்கங்கள்

வெள்ளை ஏகாதிபத்தியத்தினரை இந்தியாவிலிருந்து அகற்றிட விடுதலைக்குப் போராடிய இயக்கங்கள் பலவாகும்.

அபிநவ பாரத சபா, அனுஷியான் சமிதி, இந்திய தேசிய குடியரசு ராணுவம், சந்தால் இயக்கம், வகாபியர் எழுச்சி இயக்கம், இளம் வங்காளிகள் இயக்கம், பாரத மாதா சங்கம், மித்ரமேளா, கத்தர்கட்சி, செஞ்சட்டை வீரர்கள் சங்கம், பராசி இயக்கம், இந்துமேளா, இண்டியன் அசோசியேசன், அபி நவபாரத் சமிதி, பாரிஸ் இந்தியா கழகம், பெர்லின் கமிட்டி, யுகாந்தர் இயக்கம், மாப்பிள்ளைமார் எழுச்சி இயக்கம், நமீப்பா எழுச்சி இயக்கம், ஸ்வராஜ்யக் கட்சி, இந்தியன் ரிபப்ளிக்கின் ஆர்மி, இந்திய தேசிய இராணுவம், அகில இந்திய முஸ்லிம் லீக், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் இப்படி பல்வேறு அமைப்புக்களும், இயக்கங்களும் போராடியதின் விளைவாகத்தான் 1947 ஆகஸ்ட் 15-இல் நாடு விடுதலை பெற்றது என்பது தெள்ளத் தெளிவான வரலாறாகும்.

★ பொன்னுசாமி பிள்ளை, பிரிட்டிஷ் இந்தியா, 1805-1935, திருநெல்வேலி, 1948, பக் 151.

விடுதலைப் போராட்ட காலகட்டங்கள்

இந்திய விடுதலைப் போராட்ட காலகட்டங்கள் பலவாகும். தென்னகத்தில் மாமன்னர் பூலித்தேவர், நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப், மாவீரன் அழகுமுத்துக்கோன், வீரபாண்டிய கட்டபொம்மன், தளபதி சுந்தரலிங்கம், ஒண்டிவீரர், தீரன் திப்பு சுல்தான், மானங்காத்த மருது பாண்டியர்கள் காலத்தில் நடைபெற்ற வெள்ளையர் எதிர்ப்பு இது ஒரு கால கட்டம்;

1806இல் வேலூர் புரட்சி; தளவாய் வேலுத்தம்பியின் புரட்சி; அதனைத் தொடர்ந்து நாடெங்கும் நடைபெற்ற சிறு சிறு புரட்சிகள் இது ஒரு கால கட்டம்.

கி.பி. 1857-இல் நடைபெற்ற சிப்பாய்களின் எழுச்சி; அதனைத் தொடர்ந்து இந்தியப் புரட்சி இயக்கங்களின் வளர்ச்சி, இது ஒரு கால கட்டம்.

இந்திய தேசிய காங்கிரஸ்

பம்பாய் (மும்பை) அசோசியேசன் ஆதரவில் பம்பாய் கோகுல் தாஸ் மஹால் சமஸ்கிருத கல்லூரியில் 1885 டிசம்பர் 28, 29ஆம் தேதிகளில் அகில இந்திய காங்கிரஸின் முதல் மகாசபை கூடிய கால கட்டத்திற்கு முந்தைய விடுதலை இயக்க வரலாறு ஒரு பகுதி; அதன்பின் அகில இந்திய அளவில் லோக மான்ய பாலகங்காதர திலகர் முதல் தென்னாட்டில் வீரத்தலைவர் வ.உ. சிதம்பரம்பிள்ளை வரை போராடிய கால கட்டம் மற்றொரு பகுதி. சுதந்திரப் போரில் அண்ணல் காந்தியடிகளின் சகாப்தம் துவங்கிய கால கட்டம் இன்னொரு பகுதியாகும்.

லெட்டர்பேடு கட்சி

இந்திய அரசியலில் நிலவிய சூன்ய சூழ்நிலையில் அண்ணல் காந்தியின் அரசியல் பிரவேசம் அவருக்கு நல்ல வாய்ப்பை அளித்தது.

தனியார் இல்லங்களில் போர்டுகளிலும், லட்டர் பேடுகளிலும் இருந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு புத்துயிர் அளிக்க, நாட்டு விடுதலைக்கு முஸ்லிம் மக்களுடன் இணைந்து போராட காந்தியடிகளுக்கு சந்தர்ப்பம் அமைந்தது; கிடைத்த வாய்ப்பைப் பலமாகப் பற்றிக் கொண்டார்; அதன் விளைவாக உருவானது கிலாபத் இயக்கமும், ஒத்துழையாமை இயக்கமும் ஆகும்.

கிலாபத்

இந்திய விடுதலை இயக்க வரலாற்றில் 1919, 1920 ஆம் ஆண்டுகள் மிக முக்கிய ஆண்டுகளாகும். முதல் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் 1918 ஜூன் 5-இல் பிரிட்டிஷ் பிரதம மந்திரி லாயிட் ஜார்ஜூம், இந்திய வைசிராயும், பிரிட்டிஷ் அரசு பழி வாங்கும் கொள்கையை மேற்கொள்ளாது என்றும், துருக்கியர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் ஆசியா மைனரையும், திரேசையும் துருக்கியின் கையிலிருந்து பறித்துக் கைப்பற்ற விரும்பவில்லை என்றும் இஸ்லாமியப் புண்ணிய ஸ்தலங்கள் முஸ்லிம்களின் நிர்வாகத்தின் கீழ் வைக்கப்படும் என்றும், சமாதான உடன்படிக்கையில் துருக்கியருக்குச் சாதகமான சரத்துக்கள் சேர்க்கப்படும் என்றும் அறிவித்திருந்தனர்.

முதல் உலகப் போர் முடிந்தது; கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றாமல் பிரிட்டிஷ் அரசு துருக்கிக்குக் கடுமையான நிபந்தனைகளை விதிக்க முற்பட்டது. துருக்கியின் ஆசியப் பகுதிகளை பிரிட்டனும் பிரான்சும் பங்கு போட்டுக் கொண்டன. அதைக் கண்டித்து இந்திய முஸ்லிம்கள் ஆவேசத்துடன் ஆர்த்தெழுந்தனர்.

'பிரிட்டிஷாருக்கு எதிராக உணர்ச்சி இந்தியாவில் ஏனைய சமூகங்களில் இருப்பதைவிட முஸ்லிம்களிடையே பலமாக வேரூன்றி இருக்கிறது' என்று வங்கத்துச் சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தனது இந்தியப் போராட்டம் (1920) என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.★

மௌலானா ஷௌகத் அலி

இந்திய முஸ்லிம்களின் உணர்வினை காந்தியடிகள் விடுதலைப் போராட்டத்திற்கு சாதகமாக்கிக் கொண்டார். ஆங்கிலேயருடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கூறிவந்த காந்தியடிகள் தனது முடிவினை மாற்றி ஒத்துழையாமை இயக்கத்தின் வழிகாட்டியாக நின்று, அதனை ஒரு வலிமை மிக்க கருவியாக வளர்த்தது வரலாற்று விந்தைகளில் ஒன்றாக அமைந்தது.

பிரிட்டிஷாரின் போக்கை எதிர்த்து, 1920 மார்ச் 19-இல் அநீதிக்குப் பரிகாரம் தேட, காந்தி துக்க தினம் கொண்டாட முடிவு செய்தார்.

'அன்று பிரிட்டிஷாருடன் இந்திய முஸ்லிம்களுக்குள்ள உறவு அறுபட்டுப் போகும்' என்று மௌலானா ஷௌகத் அலி அறிக்கை விட்டார்.

இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து நின்று வெள்ளையராட்சியினை எதிர்த்தனர். அரசாங்கத்தினரால் கொடுக்கப்பட்ட பட்டங்கள்,

★ முஹம்மது ஸெயின், முஸ்லிம் இந்தியா, கொழும்பு, 1977, பக் 164.

கௌரவங்கள், அதிகாரச் சின்னங்கள், விருதுகள் ஆகியவைகளைத் தூக்கி எறிந்தனர். மகாத்மா காந்தி கெய்சரி இந்த்- (Kaisari Hind) எனும் பட்டத்தை உதறித் தள்ளினார். (காயிதே மில்லத் இஸ்மாயில் சாஹிப் அவர்கள் தங்களது பி.ஏ. படிப்பினை இந்த கால கட்டத்தில் தான் தூக்கி எறிந்து கல்லூரியை விட்டு வெளியேறினார்கள்)

கிலாபத், ஒத்துழையாமை இயக்கத்தில் காங்கிரஸின் தொண்டர் படையை விடவும், கிலாபத், (முஸ்லிம்) தொண்டர் படையே வலுவுடன் இருந்தது என்று அன்றைய அரசுக் குறிப்பு அறிவிக்கிறது.★

கராச்சியில் கிலாபத் கூட்டத்தில் முஸ்லிம்கள் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேரக்கூடாது என்று பேசியதற்காக மௌலானா முஹம்மது அலியும், மௌலானா ஷௌகத் அலியும் சிறை வைக்கப்பட்டனர்.★★

1921 ஆம் ஆண்டில் சட்ட மறுப்பு இயக்கத்தை (Civil Disobedience Movement) அண்ணல் காந்தியடிகள் ஆரம்பித்தார்.

சௌரி சௌரா

ஒத்துழையாமை இயக்கம் நாடெங்கும் வேகமாகப் பரவிக் கொண்டிருந்தது. 1922 பிப்ரவரி 5-இல் ஐக்கிய மாகாணத்தில், கோரக்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த சௌரி சௌரா எனுமிடத்தில் ஒத்துழையாமை இயக்க ஊர்வலத்தைக் கலைக்க காவல் படையினர் கடுமையாகத் தாக்கினர். துப்பாக்கித் தோட்டாக்கள் தீர்ந்து போய், தாக்கும் சக்தியை இழந்த காவல் படையினரை மக்கள் கூட்டத்தினர் எதிர் தாக்குதல் தொடுத்து, காவல் நிலையத்தில் அடைத்து தீயிட்டுக் கொளுத்தினர். 21 போலீஸ்காரர்களும், ஒரு சப் இன்ஸ்பெக்டரும் தீக்கிரையாயினர்; காவல் நிலையமும் தீயில் பொசுங்கியது. இச்சம்பவத்தை அறிந்த காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்க நடவடிக்கையை நிறுத்தி விடுவதாக அறிவித்தார். திடீரென்று சட்ட மறுப்புப் போரை காந்தியடிகள் நிறுத்தியது கேட்டு, மக்களில் பலரும் மனம் உடைந்து போயினர்.★★★

காந்தியின் அறிவிப்பைக் கண்டு புரட்சிக்காரர்கள் கடுங்கோபம் கொண்டனர். அப்போது சிறையில் இருந்த சித்தரஞ்சன் தாஸ், ஜவஹர்லால் நேரு போன்றவர்கள் காந்தியின் முடிவை கடுமையாக எதிர்த்தனர்.

★ *10-9-1920* Hindu P. 3. (For the Madras Voting in the Plenary session)

★★ பா. மாணிக்க வேலு, இந்திய தேசிய இயக்கத்தின் வரலாறு, சென்னை, 1977, பக் 106.

★★★ எம்.எஸ். சுப்பிரமணிய ஐயர், சுதந்திர சரித்திரம், சென்னை, 1953, பக் 286, 287.

இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப்படை

நாடெங்கிலுமுள்ள இளைஞர்களின் மனக்குமுறல்களைப் புரிந்து கொண்ட புரட்சிக் கூட்டத்தினர் தங்கள் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தினர். காசியில் இந்துஸ்தான் குடியரசு சங்கம் (Hindustan Socialist Republic Army) ஆரம்பிக்கப்பட்டது.

சச்சீந்திரநாத் சன்யால்

வங்காளத்தைச் சேர்ந்தவர் சச்சீந்திரநாத் சன்யால்; காசியில் வாழ்ந்து வந்த இவர் சுவாமி விவேகானந்தர், மகான் அரவிந்தர் வழியில் வந்த புரட்சிக்காரர். 1912-18களில் அனுசீலன் சமிதி என்ற வங்கப்புரட்சி இயக்க கிளையினை உத்திரப்பிரதேசத்தில் தொடங்கி நடத்தியவர்; ராஷ்பிகாரி போஸின் சீடரான இவர் காசியில் துவங்கிய 'இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப்படை'யில் ஏராளமான இளைஞர்கள் சேர்ந்தனர்.

கல்யாண் ஆசிரமம்

காசியைச் சேர்ந்த மன்மநாத் குப்தா அவரது தம்பி மன்மோகன் குப்தா, ஆகியோர் காசியில் 'கல்யாண் ஆசிரமம் என்ற ஆஸ்ரமத்தை நிறுவி புரட்சி இயக்கப் பணியினை நடத்தி வந்தனர். உத்திரப்பிரதேச மாநிலம் ஷாஜகான்பூரைச் சேர்ந்த ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ப குல்லாகான், நவோதா கிராமத்தைச் சேர்ந்த ரோஷன்சிங், சச்சீந்திர பக்ஷி, பூபேந்திர நாத் சன்யால், ராமகிருஷ்ண கத்ரி, ராஜ்குமார் சின்ஹா, ராஜேந்திரநாத் லஹரி, குந்தன்லால், பிரேம் கிஷன் சுன்னா போன்ற பல புரட்சிக்காரர்களும் இருந்தனர்.

சந்திரசேகர் ஆஸாத்

காசி வித்யா பீடத்தில் சமஸ்கிருத மேற்கல்வி கற்க வந்த சந்திர சேகர ஆஸாத் என்ற புரட்சிகர இளைஞர் போராட்டத்தில் குதித்து நீதிமன்றம் வந்தபோது, நீதிபதி அவரைப் பார்த்து உன் பெயர் என்ன? என்ற போது என் பெயர் ஆசாத்(விடுதலை) உன் அப்பா பெயர் என்ன? சுதீன் (சுதந்திரம்) உன் வீடு எங்கே இருக்கிறது? சிறைச்சாலையில் இருக்கிறது. இப்படி பதில் சொன்ன வீர இளைஞனும் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர் தான்.

இந்துஸ்தான் சோசலிசக் குடியரசுப் படையின் சார்பில் புரட்சி (Revolutionary) எனும் நான்கு பக்க சுற்றறிக்கையினை இரகசியமாக அச்சடித்து நாடெங்கும் அனுப்பினர்; அதில் சன்யால் எழுதிய வாசகங்களின் துளிகள் இதோ....

புரட்சி

'வீர இளைஞர்களே! சுதந்திரம் என்பது சும்மா வராது! புதிதாக ஒரு குழந்தையைப் பெற வேண்டுமானால் தாய் மரண வேதனையையும், துன்பத்தையும் விலையாகக் கொடுத்துத்தான் தீரவேண்டும்! இரத்தத்தை சிந்தித்தான் ஆக வேண்டும்! புதிய சுதந்திர நாடு பிறக்க வேண்டுமானால் அதற்கு விலையாக நாமும் இரத்தம் சிந்தியே ஆகவேண்டும்; அவசியமானால் நமது இன்னுயிரையும் பலி கொடுத்தாக வேண்டும்; அகிம்சையும் கோழைத்தனமும் நிச்சயம் சுதந்திரத்தைப் பெற்றுத் தராது; வீரமும் தியாகமும் தான் பெற்றுத் தரும். புரட்சிக்காரர்கள் வெறும் பயங்கரவாதிகளோ, குழப்பக்காரர்களோ அல்ல, அதே சமயத்தில் பலாத்காரம் தேவைப்படும் போது அதை உபயோகிக்கத் தயங்குகிறவர்களும் அல்ல'...

காசி மன்மத நாத் குப்தாவின் முயற்சியினால் இந்துஸ்தான் குடியரசு சங்கத்தினரும், கல்யாண் ஆசிரமப் புரட்சியாளர்களும் ஒன்றாக இணைந்தனர். இதனால் புரட்சி இயக்க நடவடிக்கைகள் மேலும் மேலும் தீவிரமாகியது. இதனால் இயக்க நடவடிக்கைகளுக்கு பணம் ஏராளமாகத் தேவைப்பட்டது.

எதிர்காலத்தில் ஆளுங்கட்சியாக வரக்கூடும் என்ற நம்பிக்கையில், அகில இந்திய காங்கிரஸ் கட்சிக்கு செல்வந்தர்கள் பணம் வழங்கினர்;

புரட்சிக்காரர்களுக்கு யார் முன் வந்து பணம் கொடுப்பார்கள்? எனவே தனிப்பட்ட வட்டிக் கடை மார்வாடிகளிடமும், கள்ள மார்க்கெட் காரர்களிடமும் கட்டாய வசூல் செய்வது என்றும் முடிவெடுத்தனர். அப்படிச் செய்து அதன் மூலம் வசூலான பணத்தைக் கொண்டு ஆயுதங்களும் வாங்கிடத் திட்டமிட்டிருந்தனர்.

'புரட்சி இயக்கத்தின் நடைமுறை வேலையை அஷ்பாக் குல்லாகானும் சசீந்திரநாத் சன்யாலும் முன்னின்று கவனித்தனர்.'★

புரட்சிக்கான புதிய ஆயுதங்கள் வெளிநாடுகளிலிருந்து கொண்டு வர ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கப்பலில் ஆயுதங்கள் வெளிநாட்டிலிருந்து வந்து விட்டது. அதனை வாங்கிட பத்தாயிரம் ரூபாய் பணமும் உடனடியாகத் தேவைப்பட்டது.

★ சொ. பாரதிப்பித்தன், இந்திய நாட்டின் எரிமலைத் தியாகிகள், 2-ம் தொகுப்பு, சென்னை, 1974, பக் 56.

அத்தோடு சில மாதங்களில் கட்டாய வசூல் முயற்சியும் கைவிடப்பட்டது. ஏனென்றால் சிலர் தங்களுக்கு வேண்டாதவர்களைப் பழிவாங்குவதற்காகத் தவறான தகவல்களைக் கொடுத்து கட்சியை ஏவி விட ஆரம்பித்தார்கள். இதனால் இந்த முறையைக் கைவிட்டு விட்டு, பிரிட்டிஷ் அரசாங்க கஜானாக்களை கொள்ளையடிப்பது என்று புரட்சியாளர்கள் முடிவெடுத்தனர்.

இந்த யோசனையை அஷ்பாக் குல்லாகான் முதலில் எதிர்த்தார். 'இப்போதே நம் இயக்கத்தின் விவரங்களை அரசு அறிந்திருக்கிறது. நாம் பிரிட்டிஷ் அரசாங்கப் பணத்தைக் கொள்ளையிட்டால் பிரிட்டிஷ் அரசாங்கத்தை வலுச்சண்டைக்கு இழுப்பது போலாகும். அரசாங்கத்தை கவிழ்க்கத்தான் போகின்றோம். போதிய பலமின்றி இந்தக் காரியத்தைச் செய்ய முனைந்தால் நாம் நமது இலட்சியத்தை அடையக் குந்தகம் விளையும் என்றார்.' அஷ்பாக்குல்லாகான். ஆனால் புரட்சிக் குழுவினர் அவரது கூற்றை ஏற்கவில்லை, பின்னர் குழுவினர் அனைவரும் அஷ்பாகுல்கான் உட்பட அனைவரும் அரசாங்கப் பொருட்களைக் கொள்ளையிட ஏகமனதாக முடிவெடுத்தனர்.

காக்கோரி இரயில் கொள்ளை

வட இந்தியாவில் நடைபெற்ற முதல் பெரிய சதி வழக்கு காக்கோரி இரயில் கொள்ளையாகும். 1925 ஆகஸ்ட் 9-ஆம் தேதியன்று லக்னோவிலிருந்து சகாரன் பூர் என்ற ஊருக்குச் செல்லும் எட்டாவது எண் பாசஞ்சர் இரயில் ஏற்றப்பட்டு வந்து கொண்டிருந்த இரயில்வே வராந்திர வசூல் பணத்தை உத்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள காக்கோரி இரயில் நிலையத்தில் கொள்ளையடிப்பது என்று புரட்சிக் கூட்டத்தினர் தீர்மானித்து, அதன்படி அவ்வாறே செய்தும் முடித்தனர்.

3541 ரூபாய், மூன்று அணா பைசாக்கள் இல்லை. (3541-3-0) ரொக்க நாணயங்கள், ரூ 1512க்கு ரூபாய் நோட்டுக்கள், ரூ 125, அணா ஒன்றுக்கான பணத்திற்கான வவுச்சர்கள் (செக், டிராப்ட் போன்ற வவுச்சர்கள்) இக்கூட்டத்தினரால் அப்போது கைப்பற்றப்பட்டது.

ராம்பிரசாத் பிஸ்மில், அஷ்ப குல்லாகான், ராஜேந்திர நாத் லஹரி, முராரி சர்மா, முகுந்தலால், மன்மதநாத் குப்தா, சச்சீந்திரநாத் பக்ஷி, பன்வாரி லால், சந்திர சேகர ஆஸாத், ராம்நாத் பாண்டே ஆகிய பத்து பேர் கொண்ட குழுவினர் தான் இந்தக் காரியத்தைச் சாதித்து முடித்தனர். முதலில் ரயில்வே போலீசார், இந்த வழக்கினை விசாரித்தனர்.

இந்தக் கொள்ளை புதுமையானதாக இருந்தது. படித்தவர்கள் சேர்ந்து செய்ததாக போலீசாரால் கருதப்பட்டது என்பதால் சி.ஐ.டி. போலீசார் இதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்டனர். ஹார்ட்டன் (Horton) என்ற அதிகாரி இதனை விசாரித்தார். பல்வேறு வழிகளில் துப்பு துலக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இறுதியில் உத்திரப்பிரதேசத்தில் புரட்சிக் கூட்டத்தினர் இயங்கி வருவது கண்டுபிடிக்கப்பட்டது. மேற்கொண்டும் அவர்கள் எதுவும் செய்து விடக்கூடாது என்று போலீசார் அவர்களைக் கைது செய்ய ஆரம்பித்தனர். அப்போது போலீசாரின் கரங்களில் அகப்படாமல் தப்பித் திரிந்த தீரர் தான் அஷ்பாக்குல்லாகான் ஆவார்.

அஷ்பாக்குல்லாகான்

சுதந்திரப்புரட்சி இயக்கக் காலகட்டத்தில், உத்திரப்பிரதேசத்தில் சந்திரசேகர ஆஸாத், பகத்சிங் இவர்களின் பெயர்களோடு, அஸ்பா குல்லாகானின் பெயரும் வீட்டுக்கு வீடு பேசப்படுகின்ற பெயராக இருந்தது. கி.பி. 1900 அக்டோபரில் ஷாஹகான்பூரில் பிரதான குடும்பத்தில் ஷபிபுல்லா என்பவரது மகனாகப் பிறந்தவர் அஷ்பாக்குல்லாகான். எட்டாவது வகுப்பு வரை படித்தவர்;★ கல்லூரி வரை படித்தவர் என்றும் சொல்லப்படுகிறது. இந்துஸ்தான் சோசலிச குடியரசுப்படையில் உறுப்பினராக இருந்தவர். கி.பி. 1921-இல் இந்திய சுதந்திரப் போரில் ஒத்துழையாமை இயக்கத்தில் தீவிரமாகப் பங்கெடுத்தார்.

மாற்றுப் பெயர்கள்

அஷ்பா குல்லாகானுக்கு குன்வர்ஷி (Kunwarji), வார்சி (Warsi), கிருஷ்ணன் (Krishnan) ஹஸ்ரத் என்ற மாற்றுப்பெயர்களும் உண்டு.

ஜோகேஸ் சாட்டர்ஜி

வங்காளத்துப் புரட்சிவாதியான ஜோகேஸ் சாட்டர்ஜி (Jogesh Chatterjee) இந்தியா முழுவதும் புரட்சி இயக்க கிளைகளை நிறுவி வந்தார். 1924-இல் மழைக்காலத்தில் ஷாஜஹான்பூருக்கு வந்தார். அவருடன் ராம்துலாரி (RamDularey) என்பவரும் உடன் வந்தார்.

ராம்பிரசாத் பிஸ்மில்

அஷ்பாக் உல்லாகான் பள்ளியில் படிக்கும்பொழுதே அவரது வகுப்புத் தோழராக இருந்தவர் ராம் பிரசாத் பிஸ்மில். வங்காளத்து புரட்சித்

★ Dr. P.N. Chopra, who's who of Indian Martyrs, Vol, I, New Delhi, 1969.

தலைவர்கள் ராம்பிரசாத் பிஸ்மிலின் இல்லத்தில் தங்கியிருந்தனர். அப்போது தான் அந்த வீட்டிற்கு அஷ்பாக்குல்லாகான் வந்தார். அதன்பின் இரகசியக் கூட்டம் நடைபெற்றது. ஷாஜஹான்பூரின் புரட்சி இயக்க அமைப்பாளராக (Organiser) ராம்பிரசாத் பிஸ்மிலும், துணை அமைப்பாளராக (Assistant Organiser) அஷ்பாக்குல்லாகானும் நியமிக்கப்பட்டனர்.

மூன்றாம் முறை - முயற்சி வெற்றி

காக்கோரியில் புகழ்பெற்ற ரயில் கொள்ளை நடைபெறுவதற்கு முன்பு இரண்டு தடவைகள் முயற்சிகள் நடைபெற்றது என்று அஷ்பா குல்லாகானே தனது சக கூட்டாளிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஒருமுறை முயன்ற போது, ரயிலில் பயணம் செய்தவர்களில் சிலர் புரட்சிக் கூட்டத்தினருக்கு அறிமுகமானவர்களாக இருந்ததால் கொள்ளை முயற்சி கை விடப்பட்டது. மூன்றாவது முறைதான் புரட்சிக் கூட்டத்தினரின் திட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

1925 ஆகஸ்ட் 9-இல் புரட்சி வீரர்கள் இரயில் நிலையத்தை அடைந்தனர். புரட்சிவீரர்கள் பத்துப் பேர்களும் லக்னோ-சகாரன்பூர் ரயில் வந்ததும் அதில் தாவி ஏறினர். அஷ்பா குல்லாகானும் மற்ற இருவரும் இரண்டாம் வகுப்பு டிக்கட் வாங்கியிருந்தனர். ஐந்து நிமிடத்திற்குள் தலைப்பாகை, முண்டாசு, முகமூடிகளை அணிந்து துப்பாக்கிகள் சகிதமாக அசல் நாட்டுப்புறக் கொள்ளைக்காரர்களைப் போல் வேடம் அணிந்து ஆலம் நகரை நோக்கிப் போய்க் கொண்டிருந்த இரயிலை அபாயச் சங்கிலியைப் பிடித்து இழுத்து நிறுத்தினார்கள்.

ரயில் நின்றதும் பயணிகளில் இளைஞர் ஒருவன் ரயில் ஏன் நிறுத்தப்பட்டது? என்று கேட்டார்; எங்களது நகைப்பெட்டி விழுந்து விட்டது அதனை எடுத்திட ரயிலை நிறுத்தினோம் என்று புரட்சிக் கூட்டத்தினரால் பதில் சொல்லப்பட்டது.

அதன்பின் புரட்சி வீரர்கள் இருவர் நின்று கொண்டிருந்த ரயில் எஞ்சின் டிரைவரை மடக்கிப் போட்டார்கள். ரயிலின் கார்டு குப்புறப்படுக்க வைக்கப்பட்டார். மற்றவர்கள் இரயிலில் இருந்த பயணிகளை எச்சரித்து விட்டு மின்னல் வேகத்தில் கஜானாப் பெட்டி வைக்கப்பட்டிருந்த இரயில் பெட்டிக்குத் தாவினர். பல்வேறு ரயில் நிலையங்களில் வசூலாகும் தொகைகள் பைகளில் கட்டப்பட்டு இரும்புப்பெட்டி ஒன்றில் வைக்கப்பட்டு இருந்தது. அங்கு காவலாக இருந்த காவலரிடமிருந்து துப்பாக்கிகளைப் பிடுங்கி நிராயுத பாணிகளாகக்கினார்கள்.

பெட்டியின் பூட்டை உடைத்த தீரன்

இரயில்வே கலெக்ஷன் பணமிருந்த இரும்புப் பெட்டியின் பூட்டை முதன் முதலாக உடைத்தவர் அஷ்பாக்குல்லாகான்.

காக்கோரி இரயில் நிலையத்தில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங் குறித்து அந்தப் புரட்சிக் குழுவில் இருந்த வீரர் மன்மத நாத் குப்தா அன்றைய அனுபவத்தை 'They lived dangerously' என்ற நூலில் குறிப்பிடும் போது,

'எல்லாம் திட்டமிட்டவாறு நடந்து கொண்டிருந்தது. ஆனால் இரும்புப் பெட்டி மட்டும் எங்கள் கைக்கு அசைந்து கொடுக்க வில்லை. நானும் அஷ்பாக்குல்லா கானும் ரயில் வண்டியின் முடிவில் இரும்புப் பெட்டிக்கு அருகில் நின்று கொண்டிருந்தோம். இன்னும் சிறிது காலங் கடத்தினால் திட்டங்கள் தோற்று விடும் என்பதை அறிந்த அஷ்பாக்குல்லாகான் தலைவரின் உத்திரவிற்குக் காத்திராமல், தனது கையில் இருந்த துப்பாக்கியை என்னிடம் கொடுத்துவிட்டு அந்தச் சம்மட்டியை வாங்கி ஒரு போடு போட்டார். வெற்றி எங்கள் காலடிகளில் வந்து விழுந்து விட்டது' (அதாவது ரயில்வே கலெக்ஷன் பணம் முழுவதும் புரட்சிக்கூட்டத்தினரின் கரங்களில்)

Notable Indian Trials

'புகழ்மிக்க இந்திய வழக்குகள்' எனும் ஆங்கில நூலில் இது குறித்து காணப்படும் வாசகங்கள் இதோ:

'Ram Prasad and the others having failed to break the safe, Ashfaqullah khan gave his pistol to Ram Prasad and himself broke open the safe'....'★

அஷ்பாக்குல்லாகான் என்ற அஞ்சா நெஞ்சன் அதி சீக்கிரத்தில் அந்தக் காரியத்தை நிறைவேற்றினார். கஜானாவிலிருந்த பணத்தையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டு புரட்சிக்காரர்கள் பத்திரமாகப் பதினைந்தே நிமிடங்களில் தப்பிச் சென்றனர்.

வெள்ளையர் கலக்கம்

புரட்சிக்காரர்களின் இந்தச் செயல் பிரிட்டிஷ் அரசாங்கத்தை கதிகலங்க வைத்தது. சர்வ வல்லமை படைத்த பிரிட்டிஷ் அரசாங்கத்தின் போலீசார் இந்த வழக்கில் துப்புத் துலக்க முடியாமல் ஒரு மாத காலம் வரையில் திணறிக்கொண்டிருந்தனர். ★★

★ Notable Indian Trials, The Kakori Conspiracy case, P. 99
(இந்த நூலின் தலைப்புப்பக்கம் கிடைக்கவில்லை.)

★★ *சிவலை இளமதி, சரித்திரத்தை மாற்றிய சதி வழக்குகள், சென்னை, 1996, பக் 337.*

ஐயாயிரம் ரூபாய் பரிசு

காசியில் இயங்கிக் கொண்டிருந்த புரட்சி இயக்கத்தைப் பற்றி போலீசாருக்கு பொதுவான சந்தேகங்கள் இருந்த போதும், காக்கோரி இரயில் சம்பவம் பற்றி எந்தத் தகவலும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இது சம்பந்தமாக தகவல் தருவோர்க்கு 5 ஆயிரம் ரூபாய் தக்க சன்மானமாகத் தரப்படும் என்று ஆங்கிலேயஅரசு அறிவித்தது.

1925 செப்டம்பர் 20

நாற்பது நாட்களுக்குப் பின் புரட்சி வீரர்கள் வேட்டையாடப்பட்டனர்; நாற்பது பேர்களுக்கு மேல் கைது செய்யப்பட்டனர்; ஆனால் அஷ்பாக் குல்லாகான் போலீசார் கரங்களில் அகப்படவில்லை. பிரிட்டிஷ் ஆதரவு பத்திரிகைகள் 'காக்கோரி' இரயில் கொள்ளையர்கள் கைது' என்று செய்தி வெளியிட்டது.

தேசபக்த ரத்தினங்கள்

கான்பூர் காங்கிரஸ் தலைவரும், சிறந்த தேசபக்தருமான கணேஷ் சங்கர் வித்யார்த்தி நடத்தி வந்த 'பிரதாப்' என்ற இந்தி நாளேட்டில் மட்டும் புரட்சி வீரர்களின் கைது குறித்து 'தேச பக்த ரத்தினங்கள் கைது' எனும் தலைப்பில் செய்தி வெளியாயிற்று.

ரயிலில் இருந்து கைப்பற்றிய பணத்தை, தொகைகளை எடுத்துக் கொண்டு, பையை மழைநீர் நிறைந்த சாக்கடையில் எறிந்து விட்டுப் போய்விட்டனர்; அது அவர்கள் சென்ற திசையினை போலீசாருக்கு காட்டிக் கொடுத்தது. அத்தோடு புரட்சிக் குழுவிலிருந்து, போலீசின் கையாளாக மாறிய வீரபுத்திர திவாரி என்பவரது துரோகத்தால் காசி, லக்னோ, அலகபாத் ஆகிய ஊர்களில் பலர் கைது செய்யப்பட்டனர்.★

பனாரசி

நாற்பது பேரைக் கைது செய்த பின்னரும் போலீசாரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய முடியவில்லை. புரட்சி வீரர்கள் பலர் சித்திரவதைக்குள்ளானார்கள்; போலீஸ் தகவல்களைப் பெற படாதபாடு பட்டது. ஆனால் சமீபத்தில் திருமணமான பனாரசி என்ற இளைஞன் தன் மனைவி வடித்த கண்ணீரைக் கண்டு, மனம் பொறுக்காமல் தனக்கு விடுதலை கிடைத்து விடும் என்ற நப்பாசையில் சில தகவல்களைப்

★ பி. கோதண்டராமன், இந்தியப் புரட்சி இயக்கம், சென்னை, *1978*, பக் *183*.

போலீசாரிடம் சொன்னார். எனினும் பூரண தகவல் கிடைக்கவில்லை. கிடைத்த தகவலை வைத்து 20 பேர்கள் மீது காக்கோரி இரயில் சம்பவம் குறித்து அரசாங்கம் வழக்குத் தொடர்ந்தது.

நீதிபதி அனியுதீன்

காக்கோரி சதி வழக்கு முதலில் நீதிபதி அனியுதீன் முன்னிலையில் நடைபெற்றது. பின்னர் அது மாற்றப்பட்டது. நீதிபதி ஹாமில்டன் என்ற ஆங்கிலேய நீதிபதியின் முன்னால் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தது.

மோதிலால் நேரு

புரட்சிக் கூட்டத்து இளைஞர்களுக்காக பண்டித ஜவஹர்லால் நேருவின் தந்தையாரான மோதிலால் நேரு, ஸ்ரீ பிரகாசி, லாலா லஜபதிராய், ஆச்சார்யா நரேந்திர தேவா ஆகியோரின் முயற்சியால், பண்டித கோவிந்த வல்லபபந்த், சி.பி. குப்தா, மோகன்லால் சாக்ஸேனா, கலிக் குஸ்ஸமான், ஹரிஹரநாத் மிஸ்ரா, ஆர்.சிஹா ஜெல்லா, பி.கே. சௌத்ரி முதலிய மிகச் சிறந்த வழக்கறிஞர்கள் ஆஜரானார்கள்.

(பண்டித கோவிந்த வல்லப பந்த், சி.பி. குப்தா பிற்காலத்தில் மத்திய அரசாங்கத்தில் உள்துறை அமைச்சராகவும், உ.பி. மாநில முதல்வராகவும் இருந்தவர்கள்)

அரசுத் தரப்பில் ஜெகத் நாராயணன் முல்ஸி என்ற லக்னோ நகரின் வழக்கறிஞர் நாளொன்றுக்கு 500 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டு வாதாடினார். ஆங்கிலேயரான ஆர்.ஏ. ஹோல்டன் என்பவரும் அரசாங்க சார்பில் வாதாடினார்.

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட புரட்சி வீரர் சந்திர சேகர் ஆஜாத் மட்டும் கடைசி வரை போலீசாரிடம் அகப்படவில்லை.

அஷ்பாக் குல்லாகானும், சசீந்திரநாத் பக்ஷியும் நெடுநாள் வரை அகப்படவே இல்லை. 200 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். பின்னர் தெஹ்லியில் வைத்து அஷ்பாக்குல்லாகான் போலீசாரால் கைது செய்யப்பட்டார். அவர் மீது வேறு ஒரு வழக்கு ஜோடிக்கப்பட்டது.

ஜெயில் வார்டர் சாதுல்லா

வழக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருந்தது. சிறையிலிருந்த புரட்சி வீரர்களை வெளியிலிருந்து கயிறு கட்டி தூக்கி தப்பிக்கச் செய்யும் திட்டம் தீட்டப்பட்டது. சிறை வார்டர் சாதுல்லா இத்திட்டத்திற்கு உதவியாக இருந்தார். ஆனாலும் அந்தத் திட்டம் நிறைவேறவில்லை.

18 மாதங்கள்

1925 ஆகஸ்ட் 9-இல் நடைபெற்ற காக்கோரி இரயில் கொள்ளை சம்பவம்; 1925 செப்டம்பரில் புரட்சி வீரர்கள் கைது; 1927 மார்ச் மாதம் விசாரணை நிறைவுற்றது. 1927 ஏப்ரல் 6-இல் நீதிபதி ஹாமில்டன் குனிந்த தலை நிமிராமல் தனது 115 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பைப் படித்து முடித்தார்.

தண்டனை விவரம்

மன்மநாத் குப்தா 14 ஆண்டு கடுங்காவல், ராஜ்குமார் சின்ஹா, சுரேஷ்.சி. பட்டாச்சாரியா, விஷ்ணு சரன் டப்ளிஸ், ராமகிருஷ்ண கத்ரி ஆகியோருக்கு 10 ஆண்டு கடுங்காவல், பிரேம் கிஷன் கன்னா, ராம்நாத் பாண்டே, ராம்துலாரி திரிவேதி, பூபேந்திர நாத் சன்யால் ஆகியோருக்கு 5 ஆண்டு கடுங்காவல், பிராணபேஷ் சட்டர்ஜி, பன்வாரிலால் ஆகியோருக்கு 4 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

தீவாந்திர சிட்சை

தீவாந்திர சிட்சை என்று அழைக்கப்பட்ட நாடு கடத்தப்படும் தண்டனையை, சச்சீந்திரநாத் சன்யால், கோவிந்த சரன்கார், ஜோகேஷ் சந்திர சட்டர்ஜி, சத்தியேந்திர நாத் பக்ஷி, முகுந்தலால் ஆகியோர் பெற்றனர்.

தூக்குத்தண்டனை

ராஜேந்திரநாத் லஹரி, ராம் பிரசாத் பிஸ்மில், ரோஷன்சிங், அஷ்பாக் குல்லாகான் ஆகிய நால்வருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

தங்களுக்கு விதிக்கப்பட்ட கடும் தண்டனைகளைக் கேட்டு புரட்சி வீரர்கள் சிறிதும் சிந்தை கலங்கவில்லை.

அஷ்பாக் குல்லாகான் பற்றி பகத்சிங்

'எதற்கும் கவலையடையாத கவிஞர் அஷ்பாக்குல்லாகான் தூக்கு மேடையை நோக்கிச் சென்றார்; அவர் அழகு மிகுந்தவர்; நல்ல உடற்கட்டு வாய்ந்த கம்பீரத் தோற்றமுடையவர், ஆனால் சிறைவாசத்தால் சற்று மெலிந்து போயிருந்தார். தமது பலவீனத்துக்கு மனத்துயரம் காரணமல்ல என்று ஒரு சந்திப்பின் போது கூறினார்; அல்லாஹ்வை வழிபடுவதிலே தாம் ஆழ்ந்து போயுள்ள காரணத்தினால்தான் தான் உட்கொள்ளும் உணவின் அளவு குறைந்து போய் விட்டது என்பதுதான் உண்மை என்றும் அவர் குறிப்பிட்டார்.

அஷ்பாக்குல்லாகான் தூக்கிலிடப்படுவதற்கு முதல் நான் அவரைச் சந்தித்தேன், நன்கு தலைவாரிப் பளிச்சென்று காணப்பட்டார். அவருடைய நீண்ட நன்கு வாரப்பட்ட முடி அழகாக இருந்தது. அவர் மகிழ்ச்சியுடன் சிரிக்கச் சிரிக்கப் பேசினார்.

'நாளைய தினம் தமக்கு 'மணமுடிக்கப்பட' இருப்பதாக அவர் கூறினார். மறுநாள் காலை தம்முடன் புனித திருகுர்ஆனை எடுத்துக்கொண்டு ஹஜ் யாத்திரிகரைப் போல வலீஃபாவைச் (அன்றாடம் உச்சரிக்கும் தியானச் சொற்கள்) சொல்லிக் கொண்டே அவர் துணிவுடன் நடந்து சென்று தூக்குக் கயிற்றை முத்தமிட்டார்''. இது அஷ்பாக்குல்லாகானைப் பற்றி புரட்சி வீரர் பகத்சிங் எழுதிய கடிதம் தரும் செய்தியாகும்.★

ஒருபிடி மண்

போலீசாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்பட்ட அஷ்பாக்குல்லாகானை விசாரித்த சிறப்பு நீதிபதி 'இவர் ஆப்கானிஸ்தான் தூதரிடம் பாஸ்போர்ட் அனுமதி பெற்று ஆப்கானிஸ்தானத்திற்கு ஓடி விடத் தயாராயிருந்தார்' என்ற குற்றச்சாட்டை அறிவித்தார். விசாரணையின் போது ஐந்து குற்றங்கள் அஷ்பா குல்லாகான் மீது சுமத்தப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டார்.

'சில நாட்கள் தான் நான் இன்னமும் ஜீவித்திருப்பேன் - எனவே தேசத்தின் ஒரு பிடிமண்ணை எவரேனும் எனது கபன் (ஒரு முஸ்லிமின் உயிர் பிரிந்த பின்னர் நல்லடக்கத்திற்காக அணியப்படும் சாதாரண வெள்ளாடை) துணியில் வைத்து அடக்கம் பண்ணட்டும்' என்று வரிகளையே அஷ்பாக்குல்லாகான் சொல்லிக் கொண்டிருந்தார்.

அஷ்பாக்குல்லாகான் பைஜாபாத் சிறையில் இரவும் பகலும் அல்லாஹ்வின் தியானத்தில் கழித்துக் கொண்டிருந்தார்.

16-12-1927

அஷ்பாக்குல்லாகான் தூக்கிலிடப்படுவதற்கு மூன்று நாட்களுக்குமுன் 16-12-1927இல் ஃபைசாபாத் சிறையிலிருந்து நாட்டு மக்களுக்கு அறிவித்த செய்தி இதோ...

'இந்தியத்தாயின் நாடக மேடையிலே நாங்கள் எங்கள் கதாபாத்திரத்தை ஏற்று எங்கள் பங்கினை ஆற்றி விட்டோம். நாங்கள்

★ சரோஜ் நாராயணசுவாமி, எப்போதாவது எண்ணிப்பாருங்கள் - தியாகச் செம்மலின் கடிதங்கள், இந்திய அரசு வெளியீடு, புது டில்லி, 1998, பக் 50, 51.

செய்தது சரியா? தவறா? என்பது எப்படியிருந்தாலும் சரி; இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்திட வேண்டும் என்ற உணர்வில் உத்வேகத்துடன் செய்த காரியமே அது; அருமை நாட்டு மக்களே எங்களை நீங்கள் போற்றலாம்; அல்லது தூற்றலாம்: ஆனால் நமது பகைவர்களும்கூட எங்கள் துணிச்சலைப் பாராட்டவேண்டியதாயிற்று. பயங்கர வாதத்தைப் பரப்புவதற்கு நாங்கள் விரும்பியதாகச் சிலர் கூறுகிறார்கள்; அது தவறு; வழக்கு விசாரணை நீண்ட காலத்திற்கு நீடித்தது; எங்களில் பலர் நெடுங்காலமாக சுதந்திரமாகவே இருந்து வந்தோம்; சிலர் இன்னமும் கூட சுதந்திரமாக வெளியிலே இருந்து வருகிறார்கள்; அப்படியிருந்தும் எங்களுக்குத் தீங்கு விளைவித்தவர்களை நாங்களோ அல்லது எங்கள் சகாக்களில் யாருமோ துப்பாக்கியால் சுடவில்லை, அது எங்கள் குறிக்கோள் அல்ல; இந்தியத் திருநாடு சுதந்திரம் பெறச் செய்வதற்காக இந்த நாட்டில் புரட்சியைத் தோற்றுவிக்கவே நாங்கள் விரும்பினோம்.

'இவர்கள் இரக்கமற்ற கொடியவர்கள்; காட்டுமிராண்டித் தனமானவர்கள்; மானிடத்திற்கே களங்கம்' என்பன போன்ற அடைமொழிகளை நீதிபதிகள் எங்கள் மீது பயன்படுத்தினார்கள். ஆட்சியாளர்களின் இனத்தைச் சேர்ந்த ஜெனரல் டயர், ஆயுதம் எதுவுமில்லாமல் நின்ற அப்பாவி மக்கள் மீதும், குழந்தைகள், முதியவர்கள், ஆடவர்கள் மற்றும் பெண்டிர்கள் மீதும் குண்டு மாரி பொழிந்தார். இத்தகைய தங்கள் கூட்டாளிகளைக் குறிப்பிடும்போது, இந்த நீதியின் பாதுகாவலர்கள் எந்த அடைமொழிகளைப் பயன்படுத்தினார்கள்? அப்படியிருக்க எங்களை மட்டும் இவ்விதம் ஏன் நடத்த வேண்டும்'.

நாட்டு விடுதலையே குறிக்கோள்

இந்திய சகோதரர்களே! நீங்கள் எந்த மதத்தையும் சமூகத்தையும் சேர்ந்தவர்களானாலும் சரி நாட்டு நலனுக்கான போராட்டத்தில் நீங்கள் ஈடுபடவேண்டும். நம்மிடையே பயனற்ற பூசல்கள் வேண்டாம்! பாதைகள் வேறுபட்டதாக இருக்கலாம். ஆனால் அனைவரின் இலட்சியமும் ஒன்றுதான். எல்லாச் செயல்களும் இந்த ஒரே

★ காந்தியடிகளின் சகாப்தத்தில் நாட்டு விடுதலைக்குப் போராடி தூக்குமேடை ஏறியதில் முதலாவதாக இவரைக் கொள்ளலாம்.

★★ முற்கூறிய நூல் பக், 52-54.

இலட்சியத்தை மட்டுமே எட்டுவதற்கான வழிகள்தான். இந்த நாட்டின் அதிகார வர்க்கத்தினரை எதிர்த்து நிற்பதிலும், நாட்டைச் சுதந்திரம் பெறச் செய்வதற்கான போராட்டத்திலும் ஒன்று சேருங்கள். இந்த நாட்டின் ஏழு கோடி முஸ்லிம்களிலே நாட்டின் சுதந்திரத்திற்காக தூக்கு மேடைக்குச் செல்லும் முதலாவது முஸ்லிம் நான் தான்,★ அதை எண்ணிப் பார்க்கும் போது நான் பெருமையடைகிறேன். இந்தியா விடுதலை பெறட்டும்; எனது சகோதரர்கள் மகிழ்ச்சியுடன் வாழட்டும்.'

உங்கள் சகோதரன்★★
அஷ்ஃபாக் உல்லாகான்

துரோகம் எங்கள் பரம்பரையிலே இல்லை

அஷ்பாக்குல்லாகான் தனது கூட்டாளிகளைப் பற்றி ஒரு சிறிய ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால் அவருக்கு விடுதலை கிடைக்கும் என்று மறைமுகமாக அறிவுறுத்தப்பட்டது. ஆனால் அஷ்பாக்குல்லாகான் அந்த யோசனையை கோபத்துடனும், வீரத்துடனும் நிராகரித்தார். துரோகம் எங்கள் பரம்பரையிலே இல்லையென்று துணிந்து தாய்நாட்டின் உணர்வோடு இருந்தார்.

18-12-1927

அஷ்பாக்குல்லாகான் தூக்கிலிடப்படுவதற்கு முதல் நாள் எண்ணற்ற அவரது உறவினர்களும் நண்பர்களும் அவரைச் சந்தித்தனர்; அப்போது அவரது நெருங்கிய உறவினர் (மருமகன்) அழுது கொண்டேயிருப்பதைப் பார்த்த அஷ்பாக்குல்லாகான் அவரைப் பார்த்து சொன்ன வீர வரிகள் இதோ..

'கண்ணியமிக்க இந்த கடினமான பணியின் கடைசிச் சடங்கினை அதற்குரிய முழுமதிப்புடனும் உறுதியுடனும் நான் கடைப்பிடிக்க அனுமதிக்கப் படவில்லையென்றால், அந்த நிகழ்ச்சியின் புனிதத்துவம் கறை படிந்ததாக ஆகிவிடும்.

நமது தாய்நாட்டின் விடுதலைக்கான ஒரு புனிதமானப் பெரும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்ற நம்பிக்கையில், இன்று நான் என்னை மரியாதைக்குத் தகுந்தவனாக நம்புகிறேன்.

உன்னுடையவர்களில் ஒருவர் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்யும் அளவிற்கு அதிர்ஷ்டம் உள்ளவராக இருக்கிறார் என்பதனை எண்ணி நீ மகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்ள வேண்டும். குதிராம்,

கனைலால் போன்ற மாபெரும் மக்களை இந்து சமுதாயம் அர்ப்பணித்திருக்கிறது என்பதனை நீ நினைவில் கொள்ள வேண்டும். நான் முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் இது எனக்கு நல் அதிர்ஷ்டமானதுதான்''. அந்த மாபெரும் தியாகிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் பாக்கியத்தை நான் பெற்றுக் கொண்டேன்''. இதோ அதன் ஆங்கில வாசகங்கள்....

'If I am not allowed to observe the last ceremony of the noblest ordeal with all dignity and stediness then the sanctity of the occasion will be tarnished. Today I fell Myself worthy of honour with the hope that a sacred and great responsibility for the liberation of Motherland has been entrusted to me. You should fell happy and proud that one of yours is fortunate enough to offer his life. You must remember that the Hindu community has dedicated great soon like Khudiram and Kanailal. To me this is a good fortune that, belonging to the Muslim community, I have acquired the privilege of following the footsteps of those great Martyrs"★

19-12-1927

அதிகாலை வேளை; பஜ்ர் (முஸ்லிம்களின் வைகறைத் தொழுகையின் பெயர்) தொழுகையை முடித்துக் கொண்டார்; காலை 6.30. அஷ்பாக்குல்லாகான் தூக்குமரத்தருகே கம்பீரமாக நடந்து சென்றார். திருகுர்ஆன் பிரதியை அவரது கழுத்திலே சுற்றிக் கட்டிக் கொண்டு சென்றார். ஹஜ்ஜிக்கு(மக்காவிற்கு முஸ்லிம்கள் செல்லும் புனித யாத்திரை) செல்லும், ஹாஜியைப் போல், லப்பைக்க (உனது சேவையில் ஈடுபட்டிருக்கிறேன்) என்று சொல்லிக்கொண்டே கலிமா என்னும் இஸ்லாத்தின் மூல மந்திரத்தையும் ஓதிக்கொண்டே தூக்கு மேடை நோக்கிச் சென்றார் .★★

பைஸாபாத் சிறையில்

19-12-1927 அதிகாலையில் பைஸாபாத் சிறையில் தூக்குக் கயிற்றை முத்தமிடுவதற்கு முன் அஷ்பாக்குல்லாகான் சொன்ன வரிகள்...

★ K.K. Ghosh, Roll of Honour; Manmathnath Gupta, They lived Dangerously,PpH Delhi. மேற்கோள், Santimay Ray, Freedom Movement and Indian Muslims, P.p.H., Delhi P. 43.

★★ *ஹாபிஸ் ஏ.என். முஹம்மது யூசுப்பாகவீ, இந்திய விடுதலைப் போராட்ட வீரர்கள், சென்னை 1969, பக் 224.*

"எனது கரங்கள் எந்த ஒரு மனிதரின் ரத்தத்தாலும் கறைபட்டதில்லை; ஆண்டவன் முன்னிலையில், எனக்கு நீதி கிடைக்கும். எனக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அனைத்துமே தவறானவை? என்று கூறினார்.

தூக்குக் கயிறு மாட்டப்படுவதற்குமுன்

அவரது கழுத்தைச் சுற்றி தூக்குக் கயிறு மாட்டப்பட்டது; அப்போது முன் "நான் இந்தியாவை சுதந்திரமடையச் செய்ய முயற்சித்தேன்; அந்த முயற்சி என்னுடைய உயிருடன் முடிந்து விடாது'' என்று முழங்கிக்கொண்டே தூக்கில் சிரித்த முகத்துடன் மரணத்தைத் தழுவினார் அஷ்பாக்குல்லாகான். இதோ புகழ் பெற்ற சரித்திர ஆசிரியர் ஆர்.சி.மஜூம்தாரின் வரிகள்...

"I tried to make India free, and the attempt will not end with my life," and died with a smiling face.★

கூண்டிலே சிக்கிய கிளி

இது சிறையிலிருந்த போது அஷ்பாக்குல்லாகான் எழுதிய உருதுக்கவிதை.

'இனிமையான வசந்தம் பூங்காவிலே
ரோஜாமலர்கள் விரியும்
இனிமையான வசந்தகாலம்
ஆனால் பயன் என்ன?
மலர்களை விழையும் புள்ளினங்கள்
காத்திருக்கின்றன!
தோட்டக்காரனின் கருணைக்காக!
இலட்சியக் காதலெனும் பாதையிலே மடிந்திடினும்
அழிவில்லை. அமரத்துவம் அதன் பெயராம்...
பழிபாவம் அறியாத பறவைகள்
கூண்டிலே சிக்கினவே
செய்யாத குற்றத்திற்காக
பூங்காவிலே பிறப்பித்தான் ஆண்டவன்
சிறகிருந்தும் பயனில்லை
கூண்டிலே சிக்கிய கிளிகளுக்கு' இதோ அதன் மூல நகல்....

★ R.C. Majumdar, Struggle for freedom, History and Culture of the Indian People, Vol XI, Bombay, 1969, P 546



சரித்திரத்தை மாற்றிய சாகச வழக்குகள், வரலாறு படைத்த வழக்குகளில் காக்கோரி சதி வழக்கும் ஒன்றாகும். இந்தியத் திருநாட்டின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு தூக்குக் கயிற்றை முத்தமிட்ட முஸ்லிம் இளைஞர் ஹஸரத் அஷ்பா குல்லாகானின் தியாகம் போற்றப்படவேண்டும். தமது கட்சியின் முடிவு தமது சொந்தக் கருத்துக்கு மாறாக இருந்த போதிலும் அரசாங்கம் அவரைத் தன் பக்கம் இழுக்க எவ்வளவு முயன்ற நிலையிலும் கட்சியின் முடிவை நிறைவேற்ற நாட்டு விடுதலைக்காகத் தம் உயிரை ஈந்த அஷ்பாக்குல்லாகானின் தியாகத்தைப் போற்றிடச் சொற்கள் இல்லை.

இந்த நாட்டின் விடுதலைக்காக ஒவ்வொரு கால கட்டத்திலும் முஸ்லிம்கள் தங்களது உடல் பொருள் ஆவியை இந்தத் தாய் திருநாட்டிற்காக அர்ப்பணித்திருக்கிறார்கள். இந்திய விடுதலையின் நிறம் பச்சை! என்று சொன்னாலும் அது ஆச்சரியப்படுவதற்கில்லை என்று எண்ணத் தக்க அளவில் இந்த தேசத்தின் விடுதலைக்கு இந்திய முஸ்லிம்கள் ஆற்றிய பங்கு மகத்தானது. காலத்தால் அழியாதது; காலந்தோறும் நினைத்துப் பார்க்கப்பட வேண்டியது!

★★★★★

தியாகி அஷ்பாக்குல்லாகானின் நூற்றாண்டு இது; இதனைக் கருத்தில் கொண்டு அவரது நினைவாக இந்திய அரசு நினைவுத் தபால் தலை வெளியிடக்கோரி மத்திய அமைச்சருக்கு மனுச் செய்துள்ளோம். இந்தக் கோரிக்கையினை இந்திய அரசு உடனடியாக நிறைவேற்றும் என்று நம்புகிறோம்.

வரலாற்றாசிரியர்

செ. திவான் M.A., M.Phil

எழுதிய சுதந்திரப் போராட்ட நூல்கள்

1. விடுதலைப் போரில் தமிழக முஸ்லிம்கள்
2. நிகரற்ற பெருவீரன் மருதநாயகம் கான்சாகிப்
3. இந்திய சுதந்திரப் போரில் நெல்லை மாவட்ட முஸ்லிம்கள்
4. விடுதலைப் போரில் விஸ்வகர்மாக்கள்
5. கட்டபொம்மனின் கடைசி நாட்கள்
6. விடுதலையின் நிறம் பச்சை
7. கட்டபொம்மனும் கலெக்டர் ஜாக்சனும் (அச்சில்)
8. விடுதலைப்போரில் மௌலவிகள் (அச்சில்)
9. விடுதலைப் போரில் கம்பம் பீர்முஹம்மது பாவலர் (அச்சில்)
10. விடுதலைப் போரில் வீரமன்னர் குஞ்சாலி மரைக்காயர் (அச்சில்)

நல்வாழ்த்துக்கள்...

STYLE FIX TAILORS

TENKASI.

மிலன் ரெடிமேட்ஸ்

தென்காசி.

333245
322016

SHIFA
POLY CLINIC

Kailasapuram, Tirunelveli Jn

பெண்ணிற்கு பெருமை சேர்க்கும்...

தங்க நகைகளின் தாயகம்

M.H.

M.H.
ஜுவல்லர்ஸ்

236, மேலரத வீதி,
திருநெல்வேலி டவுண் - 627 006.
போன் : 0462 - 322689, 322744

இனிப்புக்களில் ராஜா

RAJA
SWEETS

ராஜா
ஸ்வீட்ஸ்

ராஜா குருப்ஸ் நிறுவன அதிபர் அண்ணன்

ஜனாப். **P. சுல்தான்** Ex.M.C. அவர்களின்

சார்பு நிறுவனங்கள்

ராஜா கட்பீஸ் சென்டர் : ராஜா கட்பீஸ் ஸ்டோர்ஸ்

ராஜா ரெடிமேட்ஸ் : ராஜா பேக்கரி [பாளை]

ராஜா கட்பீஸ் மேட்சிங் சென்டர் [டவுன்]

திருநெல்வேலி. ✆ 331712, 331713